[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967, ஜூன் 30

கிறேன். ஆகவேதான் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தை எந்த அளவுக்கு குறைத்துக்கொண்டு அலுவலகத்திலேயிருந்து மிகப் பெரிய அளவுக்குக் காரியத்திலே கவனம் செலுத்த முடியுமோ, அவ்வளவுதூரம் செலுத்துவது மிகவும் நல்லது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

டி.டி.சி.கள் பல இருக்கின்றன. இங்கே ரிப்போர்ட்டுகள் கொடுக்கப்படு கின்றன. அந்த ரிப்போர்ட்டுகள் மீது விவாதிக்க ஒரு தினம் .. ..

(The Members of the Congress Party then entered the Chamber)

5. ஒழுங்குப்பிரச்சினை.

உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர்தல்.

THIRU K. VINAYAKAM : Sir, I raise a point of order. As per your ruling, members should sit in the seats allotted to them. Is it in order that Dr. Hande should sit with Thiru M. G. Ramachandran when the proceedings are going on ?

MR. SPEAKER : Your point of order has already been upheld. I observe that Dr. Hande is not seen in the place which the hon. Member mentioned.

THIRU K. RAMAMOORTHY : The hon. Member Mr. Shanmuga Udayar is not in his seat. As per your order, we have to be in our seats. I call the Speaker's attention to this.

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Speaker, Sir you have quoted the rule and we are bound to obey that rule. But in actual practice very many difficulties will arise. I do not know the full import of the wording of the rule. Party members will have to go from their seats and consult their party leaders. Therefore, I would request you to liberalise that rule.

Mr. SPEAKER : I reserve my ruling on the point of order.

4. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஆத்திரப்பட்டு வெளியேறிய நமது மதிப்பிற்குரிய நண்பர் என்னுடைய பேச்சிலே குறுக்கிட்டு என்னுடைய நேரத்தைப் போக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆகவே, அமைச்சர்கள் இந்தச் சுற்றுப்பிரயாணத்தைக் கூடுமான வரையில் குறைத்து இங்கே அலுவலகத்திலிருந்து கொண்டே பெரிய அளவுக்குக் காரியங்களைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு நல்ல யோசனை சொல்லுகின்ற கனம் உறுப்பினரவர்கள், என்னை வர வேண்டுமென்று வற்புறுத்துவதை நிறுத்திக் கொள்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான், குறைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, கண்டிப்பாகச் சுற்றுப்பிரயாணமே போகக்கூடாதென்று சொல்லவில்லை. ஒவ்வொரு மாதத்திலும் முதல் வாரத்திலோ, கடைசி வாரத்திலோ செல்லக்கூடாது. இதற்கிடையிலேதான் செல்ல வேண்டுமென்று கூறினேன்.